## தேயிலை சக்தி நிதியம் - 2018

தேயிலை சக்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டதின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற அனைத்து நிறுவனங்களாலும் அந் நிறுவனம் சம்பந்தமாக வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படுகின்ற ஒவ்வொரு நிறுவனம் சம்பந்தமான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சட்டவிதிகளின் மூலம் காட்டப்பட்ட வகையிலான காலப்பகுதிக்குள் அந் நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையும் ஏனைய நிதிக்கூற்றுக்களும் தேவைப்படுகின்ற காலத்திற்குள் தயாரித்தல் இடம் பெறுகின்றது என்பது சான்றுப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்தல் வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) கணக்கீடுகளையும் பதிவேடுகளையும் பேணுதல்.

நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாகப் பேணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள் புத்தகங்கள் பதிவேடுகள் என்பன பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்துக்கள், மற்றும் பொறுப்புக்களின் உள்ளமை.

நிதியத்தினால் இறுதியாக கணக்காய்விற்குச் சமர்ப்பித்த 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் செலவுகள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **பெறுமதி** |
|---|---|
| **சொத்துக்கள்** | **ரூபா** |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | 350,332,493 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 346,460,128 |
| மொத்த சொத்துக்கள் | 696,792,621 |

**பொறுப்புக்கள்**

| | |
|---|---|
| உரிமை மூலதனம் | (111,648,540) |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 481,088,651 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 327,352,510 |
| மொத்த சொத்துக்கள் | 696,792,621 |

| | **ரூபா** |
|---|---|
| விற்பனைகள் | 573,519,262 |
| விற்பனைக் கிரயம் | (552,517,570) |
| மொத்த இலாபம் | 21,001,692 |

**(இ) அமைப்பு தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| (அ) தேயிலை சக்தி நிதியம் தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்ததுடன் நிதியத்தின் உரிமை மூலதனம் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது. அதற்கிணங்க 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 553.04 மில்லியனான உரிமை மூலதனம் 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 111.65 மில்லியன் மறைப் பெறுமதியான உரிமை மூலதன நிலைமையை சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்த நிலைமையின் அடிப்படையில் 2016 யூலை 13 ஆந் திகதிய 16/427/726/015-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தேயிலை சக்தி நிதியத்தின் செயற்பாடுகளை பெருந்தோட்டக் கைத்தொழில் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைத்து நிதியத்தை மீளமைப்புச் செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த | மீளமைப்புச் செய்தலின் கீழ் தொழிற்சாலை குத்தகை மற்றும் முகாமைத்துவ வருமானத்தில் தற்பொழுது ரூபா 51 மில்லியன் அளவில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் நலன்புரி காப்புறுதி நிதியத்தை கட்டியெழுப்புதல் மற்றும் பங்குதாரர்களுக்கு நலன்களைச் செலுத்துவதற்காக முறைப்படியாக நிதியத்தை கட்டியெழுப்புதல். | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பங்குதாரர்களுக்கு நலன்களை வழங்குவதற்கு மற்றும் நலன்புரி காப்புறுதி நிதியத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக மீண்டும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீளமைப்புச் செய்தலின் மூலம் தொழிற்சாலைகளை குத்தகைக்கு வழங்கி பெற்றுக்கொண்ட வருமானத்தில் ஒரு பகுதியை உரிமையாளர்களுக்கு நலன்களை வழங்குவதற்கு மற்றும் காப்புறுதி நலன்களைச் செலுத்துவதற்கு கட்டியெழுப்பப்பட்ட காப்புறுதி நிதியத்திலிருந்து தொழிற்சாலைகள் பிரிவிற்கு வழங்கப்பட்ட ரூபா 135 மில்லியனை தீர்த்து வைப்பதற்கும் அதன் பின்னர் மிகுதியாக உள்ள குத்தகை வருமானப் பணத்தை அமைச்சிற்கு செலவு வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40 மில்லியன் தொகையான நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய குறிக்கோள்கள் தொடர்பாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| புளத்கொஹுபிடிய மற்றும் பொதுபிடிய தேயிலை தொழிற்சாலைகளை நிர்மாணித்தல் 2003 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தும் அத் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்காக 2001 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 18,042,351 கூட்டுமொத்தமான முற்பணங்களை மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய 02 தேயிலை தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தக்காரர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்டது.<br><br>இத்தொழிற்சாலைகளைப் பூர்த்தி செய்வதற்காக பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடு கிடைக்காததன் அடிப்படையில் உரிய நிர்மாணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் உரிய ஒப்பந்தக்காரர்களால் ஒரு பகுதி மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.<br>அந் நிர்மாணங்களை மதிப்பீடு செய்து ஏடுகளில் | நிர்மாணக் கிரயத்தை மதிப்பீடு செய்து முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உள்ளடக்காமையின் அடிப்படையில் இந் நிலைமை உருவாகியுள்ளது. எதிர் காலத்தில் இந் நிலைமையைச் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (i) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பிரிவு | ஒவ்வொரு நிதி ஆண்டின் மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் நிலையான சொத்துக்கள் மீளாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதியத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் நிலையான சொத்துக்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 4,565,247 கூட்டு மொத்தமான கணனிகள் மற்றும் மென் பிரதிகளுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகள் மற்றும் மென் பிரதிகளுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேட்டினைப் பேணுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டவாறு பதிவேடுகள் பேணப்படுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (i) | நிதியத்திற்குச் சொந்தமான மஹவெலி தேயிலைத் தொழிற்சாலையின் முகாமைத்துவம் ரயிகம் பிளான்டேசன் தனியார் கம்பனிக்கு 2017 ஏப்ரல் 28 ஆந் | தொழிற்சாலைகளின் முகாமைத்துவத்தைப் பெற்றுக்கொண்ட ரயிகம் பிளான்டேசன் தனியார் கம்பனியால் தொழிற்சாலையின் | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் நிதியத்திற்கு ஒரு மாத தவணைப் பணம் மாத்திரம் அறவீடு செய்யக்கூடியதாக இருந்தது. மஹாவெலி தேயிலை தொழிற்சாலைக்கு தேயிலை கொழுந்துகளை வழங்குவதிலுள்ள சிக்கல்கள் மற்றும் வருமானங்களிலிருந்து செலவுகளைத் தீர்த்து வைப்பதற்கு முடியாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் 2018 யூன் 12 ஆந் திகதி தொழிற்சாலை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. அது வரை மஹாவெலி தொழிற்சாலைக்காக நிதியத்தினால் அறவிட வேண்டிய நிலுவையாகவிருந்த தவணைப் பணமும் தாமதக் கட்டணமும் ரூபா 13,691,243 தொகையாக இருந்ததுடன் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து தொழிற்சாலையை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு கையளிக்கும் வரை தொழிற்சாலையில் தேயிலை உற்பத்தி இடம் பெற்றிருக்கவில்லை. அக் கம்பனியின் பிணை வைப்பு பணத்தில் தொழிற்சாலையில் இடம் பெற்ற திருத்தம் செய்தல் நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட கிரயத்தை மதிப்பீடு செய்து உரிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் பின்னர் மீண்டும் நிலுவைப் பணம் காணப்படுமாக இருந்தால் அப் பணத்தை அறவீடு செய்வதற்குள்ள சட்ட ரீதியான இயலுமைகள் பரீட்சிக்கப்பட்டுவருகின்றது. | |
| (ii) | மெல்மேன் இலங்கை தனியார் கம்பனிக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த வலஹன்துவ தொழிற்சாலை 2018 யூன் 01 ஆந் திகதி மீண்டும் நிதியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனத்திடமிருந்து அறவிட வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 6,345,200 தொகையும் அதற்கான தாமதக் கட்டணம் ரூபா 7,642,000 தொகையுமாக ரூபா 13,987,200 மொத்த தொகை குத்தகைதாரரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. அதன் பாதுகாப்பு வைப்பு அதற்காக எதிரீடு செய்யப்பட்டிருந்தும் மேலும் காணப்பட்ட நிலுவைப் பணம் ரூபா 9,757,200 இனை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொழிற்சாலையின் முகாமைத்துவத்தைப் பெற்றுக்கொண்ட மெல்மேன் இலங்கை தனியார் கம்பனியால் தொழிற்சாலையின் முகாமைத்துவத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொழிற்சாலையை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு ஒப்படைக்கும் வரை தொழிற்சாலையில் தேயிலை உற்பத்தி இடம் பெற்றிருக்கவில்லை. அக் கம்பனியின் பிணை வைப்பு பணத்திலிருந்து தொழிற்சாலையில் இடம் பெற்ற திருத்தம் செய்தல் நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை மதிப்பீடு செய்து உரிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதன் பின்னர் மேலும் நிலுவைப் பணம் காணப்படுமாக இருந்தால் அப் பணத்தை அறவீடு | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | செய்வதற்கு உள்ள சட்டரீதியான இயலுமை பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | |
| (iii) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது குத்தகையின் அடிப்படையில் வழங்கப்பட்ட தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைப் பணம் செலுத்தப்படாத பசளைக் களஞ்சியம் மற்றும் 7 தொழிற்சாலைகளிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 21,759,975 பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 13 மாதங்கள் வரை நிலுவைப் பணத்தை செலுத்தாத குத்தகை ஆதனங்கள் சம்பந்தமாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ தவணைப் பணத்தை முறையாக செலுத்தாமையின் காரணமாக வலஹந்துவ மற்றும் மஹவெலி தொழிற்சாலைகளை மீண்டும் பொறுப்பேற்று அந்த முகாமைத்துவ வாடிக்கையாளர்களின் வைப்புப் பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.<br><br>கிலீமலே மற்றும் கொத்மலை தேயிலைத் தொழிற்சாலைகளின் கத்தகை மற்றும் முகாமைத்துவ கட்டணம் செலுத்தப்படாததன் அடிப்படையில் அந்த வாடிக்கையாளர்களக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>எல்லிடிய, தொனியகல, தெனினான, மாவரல தோட்டங்கள் மற்றும் மாவரல தேயிலை தொழிற்சாலைகளின் குத்தகை மற்றும் முகாமைத்துவ வாடிக்கையாளர்களை அழைத்து அறவிட வேண்டிய தவணைப் பணத்தைச் செலுத்துமாறு தெரியப்படுத்தி சில வாடிக்கையாளர்கள் தங்களின் தேயிலை தரகர் நிறுவனங்களினூடாக உரிய குத்தகை தவபை் பணத்தை செலுத்துவதற்கு இணங்கியுள்ளார்கள். | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி நிலுவைப் பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (iv) | தொழிற்சாலைகளை குத்தகை அடிப்படையில் வழங்கும் போது மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்த வேண்டிய மாதாந்த குத்தகையை அடுத்துவரும் மாதத்தின் முதலாந் திகதி அதற்கு முன்னர் செலுத்தாதன் அடிப்படையில் எடுக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் | நிபந்தனைகளை மாற்றுவது சம்பந்தமாக பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததனால் அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குத்தகைப் பணத்தின் 1 சதவீதமான தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகைப் பணத்தை செலுத்தாதன் அடிப்படையில் தாமதக் கட்டணமாக ரூபா 59,771,300 தொகையினை அறவீடு செய்ய வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதியத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து தொழிற்சாலைகளையும் ஒருங்கிணைத்து கணக்குகள் தயாரிப்பதற்காக 2010 ஆம் ஆண்டில் ரூபா 2,435,000 பெறுமதியான கணனி மென்பிரதி முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மென்பிரதிகள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதனை எதிர்பார்த்த கணக்குகளை தயாரிக்கும் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலைகளின் அமைவிடத்தின் பிரகாரம் வலையமைப்புச் செய்ய முடியாமையின் அடிப்படையில் இம்மென் பிரதி முறைமை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதிருந்ததுடன் தற்பொழுது நிறுவனத்தை மீளமைப்புச் செய்வதன் கீழ் தொழிற்சாலைகள் வெளிப்படைத்தரப்பினர்களுக்கு குத்தகை மற்றும் முகாமைத்துவம் செய்வதன் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அவ்வாறான மென் பிரதிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு இருக்கவில்லை. | பொருட்கள் மற்றும் சேவைகளைக் கட்டளையிடுவதற்கு முன்னர் நிறுவனத்தின் தேவையை இனங்கண்டு கொள்ள வேண்டியதுடன் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்பட்டதாக என்பதனைப் பரீட்சித்தல் வேண்டும். |

**(இ) ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மூன்று முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் அபிவிருத்தி திணைக்களத்திற்கும் ஒரு சாரதி சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த உத்தியோகத்தர்களுக்காக சம்பளமாக ரூபா 1,459,614 தொகை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் | தேயிலை சக்தி நிதியத்தை மீளமைப்புச் செய்வதன் கீழ் அதிலிருந்த நிரந்தர பகுதியணியினர்களில் ஒரு பகுதியினர் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் காணப்பட்ட வெற்றிடங்களுக்காக இணைத்துக் கொள்ளல் என்ற தலைப்பில் 2017/04/18 ஆந் திகதி கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட | வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்காக செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அந்த நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அமைச்சரவைப் பத்திரத்திற்காக 2017/06/13 ஆந் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் உழியர்கள் நிறுவனங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஊழியர்கள் தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டு இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சிறு தோட்ட அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்கள் சம்பளத்தை மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (ஈ) மனித வளங்கள் முகாமைத்துவம்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

நிதியத்தினால் முகாமைத்துவம் செய்கின்ற தொழிற்சாலைகளின் ஊழியர்களுக்கும் வெளித்தரப்பினர்களுக்கும் எதிராக நீதிமன்றங்களில் 62 வழக்குகள் கோவை செய்யப்பட்டிருந்ததுடன் நிதியத்திற்கு எதிராக நிதியத்தின் ஊழியர்களால் உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கும் தொழில் நியாய சபையில் 77 வழக்குகளும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை விசாரிக்கப்பட்டு வந்தன. மேலும் நிதியத்தின் ஊழியர்களால் நிதியத்திற்கு எதிராக தொழில் நியாய சபைகளில் தொடுக்கப்பட்டிருந்த வழக்குகளின் தீர்ப்புக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 அளவில் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டியிருந்த இழப்பீட்டுப் பணம் ரூபா 27,622,671 ஆகும்.

**முகாமைத்துவத்தின் கருத்துரைகள்**

தேயிலைச் சக்தி நிதியத்தின் தொழிற்சாலைகளில் சேவையாற்றிய வேலையாட்கள் புதிய குத்தகை / முகாமைத்துவ வாடிக்கையாளர்களின் கீழ் தொடர்ந்தும் சேவையில் வைத்திருப்பதற்கு அமைப 16/P224/726/015-1 ஆம் இலக்க 2016-07-05 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அந்த வேலையாட்களுக்கு தொடர்ச்சியாக சேவையை வழங்கும் நிபந்தனையானது குத்தகை / முகாமைத்துவத்தை கையளிக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு அவர்களின் சேவை உறுதிப்படுத்தப்பட்டது. அது தொடர்பாக தொழில் நியாய சபைக்கு தெரியப்படுத்தியிருந்தும் தொழில் நியாய சபையில் தொடுக்கப்பட்டிருந்த வழக்கு விசாரிக்கப்பட்டு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

மேலும், தொழிற்சாலைகளின் நாளாந்த சம்பளத்தைப் பெறும் ஊழியர்களின் சேவையை முறையற்ற வகையில் முடிவுறுத்தப்பட்டமை தொடர்பான

**சிபார்சுகள்**

பதவியணியினரின் சேவையை முடிவுறுத்தும் போது சுற்றறிக்கை மற்றும் அமைச்சரவை தீர்மானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உரிய வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க வழக்கு தீர்ப்பின் காரணமாக 60 நபர்களுக்கு ரூபா 24,602,381.25 தொகையும் கணக்காய்வு செய்யும் வழங்குனர்களுக்காக 24 நபர்களுக்கு ரூபா 3,020,290 தொகையுமாக ரூபா 27,622,671.25 தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு தூர நோக்கங்களுடன் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்து வரும் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்காக தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தலை விரைவுபடுத்துதல் வேண்டும். |